| O.S.No. 208/2024 | DW3: திரு. பாஸ்கரன் த/பெ. திரு. முனுசாமி | 25-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. இறந்துபோன சண்முகம் எனது நண்பர். சண்முகத்தின் தாயார் பெயர் தனம் ஆகும். சண்முகத்தின் தம்பி பெயர் சந்தோஷ். சண்முகம் 2 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார். எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது சொத்தில் பங்கிற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சண்முகத்தின் தந்தை பெயரில் கொள்ளமோட்டில் சொத்து உள்ளது, வீட்டு மனையாது 4 பேருக்கு பாகம் உள்ளது, அதில் 3 பேரில் பாகத்தினை சண்முகம் வாங்கினார். சண்முகம் இடிந்து போன வீட்டினை கிரையம் வாங்கினார். சண்முகம் மட்டும்தான் அந்த வீட்டில் குடும்பம் இருந்தார், மற்றவர்கள் இல்லை.

2. சண்முகம் வீட்டின் விசேஷங்களில் நான் கலந்து கொள்வேன். சண்முகத்தின் குழந்தைகளுக்கு காது குத்தியபோது அந்த விழாவில் கலந்துகொண்டீர்களா என்றால் இல்லை, நான் வெளியே சென்றிருந்தேன். சண்முகம் வீடு கட்டும்போது தானம்மாள் சண்முகத்தோடுதான் இருந்தார். சண்முகம் திருமணம் முடிந்து பாண்டிச்சேரிக்கு வியாபாரத்திற்காக சென்றார். சண்முகம் ஊரில் பால் வியாபாரத்தில் கூலிக்கு வேலை செய்தார். சண்முகத்திற்கு போதிய வருமானம் இல்லாததால் கொள்ளைமோட்டில் உள்ள நிலத்தினை விற்று தாவா சொத்தினை வாங்கினார் என்றால் சரியல்ல. 2008-ல் சண்முகம் சொத்தை விற்று அதற்கு அடுத்த 1 மாதத்தில் தாவா சொத்தினை வாங்கினார் என்றால் சரியல்ல. கொள்ளைமோட்டில் இருந்த சொத்தினை விற்றுதான் சண்முகம் 2-ம் வாதிக்கு காது குத்தினார் என்றால் சரியல்ல. வீட்டு மனை வாங்கியபோது நான்தான் சாட்சியாக இருந்தேன்.

3. வீடு இடித்தவுடன் தானம்மாள் எங்கு தங்கியிருந்தார் என்றால் பக்கத்தில் தங்கியிருந்தார். எனக்கு இவ்வழக்கு பொறுத்து எதுவும் தெரியாது என்றாலும், பிரதிவாதிகளுக்க ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தானம்மாள் வீடு கட்டும்போது ராஜரத்தினம் நாயுடு வீட்டில் கூட்டுக்குடும்பாக இருந்தார் என்றால் ஆமாம். சண்முகம் 2011-க்கு பிறகு வீடு கட்டி கிரஹப்பிரவேசம் போனார். வீட்டின் பெயர் என்ன என்றால் பெயர் எல்லாம் இல்லை. அந்த வீட்டின் மேல் உள்ள பெயரானது தானம்மாள் பெயரில் இருந்தது என்றாலும், இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பிறகு சண்முகம் இல்லம் என மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

ஓம்/- பாஸ்கரன்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.25 11:35:17 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**